DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 150/2024 |
| Deposition of Witness for | : | P.W. 6 |
| Name | : | **உபகாரமேரி** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின்1 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், 2 வது எதிரி ஆஜர் 3 வது எதிரி ஆஜர் இல்லை. 3 வது எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.08.2025

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது கல்லுவழியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலைசெய்து வருகிறேன். அ.சா.1 அமலி கிரேஸ் எனது மகள் ஆவார்.அ.சா.2 லேவ ஜெரால்டு பாபு எனது மருமகன் ஆவார். அ.சா.3 வேதபோதக அரசி எனது மருமகள் ஆவார். அ.சா.4 மற்றும் அ.சா.5 எனது பேரன் பேத்தி ஆவார். சாட்சி சின்னப்பன் எனது கணவர் ஆவார். இவ்வழக்கின் ஆஜர் எதிரி தினேஸ்குமார் என்பவரை மட்டும் எனக்கு தெரியும் . வழக்கு சம்பவதன்று கம்பியை வைத்து தாக்கும் போது நான் பார்த்துள்ளேன்.

2. கடந்த 25.01.2024 ம்தேதி இரவு 08.30 மணியளவில் எனது மகளும் எனது மருமகனும் எங்களை பார்ப்பதற்காக எங்களது வீட்டிற்கு வந்தார்கள் அன்றைய தினம் எங்களை பார்த்துவிட்டு இரவு 09.00 மணியளவில் அவரது ஊரான காளையார்கோவிலுக்கு சென்றுவிட்டார்கள். எங்கள் வீட்டில் நானும் எனது கணவர் சின்னப்பன் எனது மருமகள் வேதபோதக அரசி எனது பேத்தி ஜெர்லின் பேரன்

ஜோபின் ஆகியோருடன் கூட்டு குடித்தனமாக வசித்து வந்தோம். அன்றைய தினம் இரவு 10.00 மணியளவில் படுக்க செல்லும் போது வீட்டின் முன்பக்க கதவை பூட்டிவிட்டோம் பின்பக்க உள்ள கதவை பூட்டாமல் சாத்தி மட்டும் வைப்போம். நான் இரவு நேரத்தில் இயற்கை உபாதையை கழிப்பதற்காக வெளியே செல்வதற்கு வசதியாக பூட்டாமல் சாத்தி மட்டும்வைப்போம். நானும் எனது பேரன் மற்றும் பேத்தி ஆகியோர் வீட்டில் ஹாலில் படுத்திருந்தோம். எனது கணவர் சின்னப்பன் வெளியில் உள்ள வரண்டாவில் ஒரு ரோம்பில் படுத்திருந்தார். எனது மருமகள் நான் படுத்திருக்கும் ஹாலின் அருகின் உள்ள ஒரு பெட்ரூம்பில் படுத்திருந்தார். எங்கள் வீட்டின் இரவு நேரங்களில் ஹாலில் விடி லைட் எப்போதும் போட்டுதான் படுத்திருப்போம்.

3. நான் எனது வீட்டின் சாத்தப்படாமல் இருந்த பின் கேட்டின் வழியாக இயற்கை உபாதை கழிப்பதற்காக வெளி யே சென்றுவிட்டு மீண்டும் அன்றைய தினம் இரவு 02.00 மணியளவில் படுத்தேன். அப்போது ஆஜர் எதிரியான தினேஸ்குமார் என்பவர் எங்கள் வீட்டிற்குள் வந்து கம்பியால் எனதுபேத்தியின் தலையில் அடித்தார். எனது பேத்தி அடிபட்டு மடியில் வந்து விழுந்தவுடன் என்னையும் எதிரி தினேஸ்குமார் கம்பியால் இடது பக்க காதுக்கு அருகில் 3 , 4 முறை அடித்தார். எனது பேரன் எங்களது அலறல்சத்தம் கேட்டு எழுந்த போது அவரையும் எதிரி தினேஸ்குமார் கம்பியால் உச்சந்தலையில் அடித்தார். நாங்கள் மூவரும் அழுது சத்தம்போட்ட போது எனது மருமகள் வேதபோதக அரசி பெட்ரூம்பில் இருந்து கதவை திறந்து வெளியே வந்தபோது எனது மருமகளையும் கம்பியால் எதிரி தினேஸ்குமார் வலது கை விரலிலும், முகத்திலும் , உச்சந்தலையிலும் அடித்தார்.

4. எனது கணவர் ரூம்பில் எதிரி தினேஸ்குமார் வந்து தட்டியபோது எனதுகணவர் சின்னப்பன் யாருப்பா என்று கேட்டபோது அவரையும் கம்பியால் அவரது நெற்றி பகுதியில் அடித்தார். (எனது கணவர் அந்த காயங்கள் காரணமாக தற்போது சரியாக நினைவு இல்லாமல் சொன்னதையே திரும்ப திரும்ப கூறுவார் , காதும் சரியாக கேட்கவில்லை ).

5. எங்களை அடித்தவுடன் எதிரி தினேஸ்குமார் வீட்டில் இருந்து காம்பவுண்ட் சுவரை ஏறி குதித்து தப்பிவிட்டார். பின்பு அதிகாலை 05.00 மணியளவில் என்னிடம் இருந்த போனை எனது பேரன் ஜோபின் வாங்கி எனது மகள் அமலிகிரேஸ் என்பவருக்கு போன்மூலமாக தகவல்தெரிவித்தார். அதன் பிறகு எனது பேரன் ஜோபின் கதவை திறந்து அருகில் குடியிருக்கும் ஆரோக்கிய மேரி மற்றும் ஆரோக்கிய மேரியின் கணவர் சவரிமுத்து, மரியம்மாள், சாந்தி மற்றம் இந்துமதி ஆகியயோருக்கு தகவல்தெரிவித்தார்.

5. அருகில் குடியிருக்கும் மேற்படி நபர்கள் எங்கள் வீட்டிற்கு வருவதற்கும் எனது மகள் வருவதற்கும் சரியாக இருந்ததது. பின்பு காயம் பட்ட எங்களை வீட்டின் வரண்டாவில் கொண்டு வந்து வைத்து விட்டு 108 ஆம்புலன்சுக்கு தகவல்தெரிவித்து அதன் மூலமாக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். காயங்கள் அதிகமாக இருந்ததால் நாங்கள் அனைவரும் மதுரை வேலம்மாள் தனியார் மருத்துவமனைக்கு சிகிக்சைக்காக சென்றோம். நான் மருத்துவமனையில் 1 மாதம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துகொண்டேன்.

6. சம்பவம் நடந்த அன்றே எனது மகளும் எனது மருமகனும் வீட்டை பார்த்தபோது வீட்டில் இருந்த நகைகள் காணவில்லை என்று சொன்னார்கள். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**1-வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை** :

**1.** போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காளையார்கோவில் உள்ள எனது மகள் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கும் போது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் கட்டை மற்றும் கம்பியால் அடித்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, ஒரு நபர் அடித்ததாக சொன்னேன். 1 வது எதிரியை சம்பவ நடந்த அன்று நான் பார்த்தேனா என்றால் ஆமாம்.

2. 1வது எதிரியின் பெயர் எப்படி தெரியும் என்றால் போலிசார் சொல்லிதான் எனக்கு தெரியும். எதிரியை பார்த்தால் அடையாளம் காண்பிப்பேன் என்று போலிசாரிடம் நான் சொன்னேனா என்றால் ஆமாம். எங்களது வீட்டின் பிரதான வாயில் எந்த திசையில் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது. மேற்கு பக்கம் கேட்உள்ள விபரம் வெளிநபர்கள் யாருக்கும் தெரியாது என்றால் அருகில்உள்ள வீட்டுகாரர்களுக்கு தெரியும். வெளிநபர்கள் யாருக்காவதுதெரியுமா என்றால் தெரியாது, கவனிக்கமாட்டார்கள்.

3. பின்பக்கம் உள்ள கேட் பூட்டியுள்ளதா என்ற விபரம் எனக்கு மட்டும் தான் தெரியும் என்றால் சரிதான். என்னை இடது பக்க காதிற்கு அருகில் 3, 4 முறை அடித்ததாக காவல் துறையின் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது கணவரை 1 வது எதிரி அடித்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை, அடித்ததை நான் பார்க்கவும் இல்லை.

4. எதிரி காம்பவுண்டு சுவரில் ஏறி குதித்து சென்றதை நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.என்னை எங்கிருந்து தூக்கி வந்தார்கள் என்றால் ஹாலில் இருந்து வராண்டாவிற்கு தூக்கி வந்தார்கள். அப்போது எனக்கு நினைவு இருந்ததா என்றால் அப்போதுதான் நினைவு இருந்தது.

5. 1வது எதிரி தினேஸ்குமாரை சம்பவத்திற்கு பிறகு நான் எங்குவைத்து பார்த்தேன் என்றால் நான் எங்கும் பார்க்கவில்லை, ஞாபகமில்லை. சாட்சி தாமாக ஆஜர் 2 வது எதிரிதான் 1வது எதிரிக்கு துப்பு சொன்னது என்று கூறுகிறார். நான்1வது எதிரி தினேஸ்குமாரை பார்க்கவே இல்லை என்றும் போலிசார் சொன்னதன் அடிப்படையில் அடையாளம் பார்த்தாக கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

6. எனக்கு ஏற்பட்ட காயங்கள் 1 வது எதிரி தினேஸ்குமாரால் ஏற்படவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டில் நகை திருடு போனது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது மகளும் மருமகனும் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். எனது வீட்டில் நகை எதுவும் திருடு போகவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் வெளி நாட்டில்இருப்பதால் நகை பற்றி அவர் கேட்டதால் திருடு போய்விட்டது என்று பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

2 வது எதிரி கணபதி எனது ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். 2 வது எதிரி வெளியூரில் ே◌ஹாட்டலில்வேலை பார்த்து வந்தார் என்றால் காளையார்கோவிலில் வேலை பார்த்தார். 1, 2 எதிரிகள் உறவினர் என்றால் சரிதான். 1, 2 எதிரிகள் உறவினர் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 2 வது எதிரி கணபதிக்கும் 1 வது எதிரி தினேஸ்குமாருக்கும் பல வருடங்களாக பேச்சுவார்த்தையும் எந்த வித தொடர்பும் இல்லை என்றும் இருவரும் உறவினர் என்பதற்காக 2 வதுஎதிரி தவறாக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

**3 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:** இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.08.19 17:13:17 +0000

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்ரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக்காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

**உதவி அமர்வு நீதிபதி,**
**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**சிவகங்கை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 150/2024 |
| Deposition of Witness for | : | P.W. 7 |
| Name | : | **சின்னப்பன்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | **71/2025** |

**(வழக்கின்1 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், 2 வது எதிரி ஆஜர் 3 வது எதிரி ஆஜர் இல்லை. 3 வது எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.08.2025

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது கல்லுவழியில் வசித்து வருகிறேன். அ.சா.6 உபகாரமேரி எனது மனைவி ஆவார். அ.சா.2 லேவா ஜெரால்டு பாபு எனது மருமகன் ஆவார். அ.சா.3 வேதபோதக அரசி எனது மருமகள் ஆவார். அ.சா.4 ஜோபின் , அ.சா.5 ஜெர்லின் எனது பேரன் மற்றும் பேத்தி ஆவார். கடந்த 25.01.2024 இரவு 02.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தேன். அப்போது என்னுடன் எனது மனைவி , மருமகள் மற்றும் பேரக்குழந்தைகள் இருந்தார்கள்.

2. அன்றைய தினம் இரவு 10.00 மணியளவில் தூங்க சென்றுவிட்டோம். நான் எனது வீட்டின் ஒரு அறையில் தூங்கசென்றுவிட்டோம். ஆஜர் 1ம் எதிரியை சாட்சி கையைகாட்டி அவர் தான் வீட்டிற்குள் வந்ததாக கூறுகிறார் . அந்த நபர் வீட்டிற்குள் வந்து எல்லோரையும் அடித்துவிட்டு நான் படுத்திருந்த அறையின் கதவை திற என்றுசொன்னார். நான் கதவை திறந்து

வெளியே வருவதற்குள் படியை விட்டு காலை எடுப்பதற்குள் என்னை ஒரே அடியாக கம்பியால் எனது இடதுமற்றும் வலது காது பகுதி அருகே அடித்தார். ( சாட்சி தனது இடது பக்கத்தில் கம்பியால்அடித்ததால் ஏற்பட்ட காயத்தழும்பினை நீதிமன்றத்தில் காண்ப்பித்தார் )

3. எதிரி என்னை அடித்தவுடன் நான் கீழே விழுந்து மயக்கமாகி விட்டேன். அதன் பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. 2, 3 நாட்களுக்கு பிறகு நான் மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது தான் நினைவு திரும்பியது. என்னுடன் எனது மனைவி, மருமகள் மற்றும் பேரக்குழந்தைகள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தனர். நான் சிகிச்சை முடிந்து வந்த பின்பு தான் எனது மனைவி, மருமகள் மற்றும் பேரக்குழந்தைகளுக்கு காயம் ஏற்பட்டது தெரியும். நான் வேலம்மாள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சுமார் 2 மாதங்கள் சிகிச்சை எடுத்துகொண்டேன். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**1வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை** :

1. காயம் பட்டு மருத்துவமனையில் இருந்தபோது மறுநாள் போலிசார் வந்து என்னை விசாரித்தார்களா என்றால் என்னை விசாரித்தார்கள், அடித்தவரை யார் என்று தெரியாது என்று சொன்னேன் என்று சாட்சி தாமாக கூறுகிறார். எனது அறையின் கதவை தட்டியதால் தான் நான் எனது அறையின் கதவை திறந்தேன் என்றால் சரிதான். நான் கதவை திறக்கும் வரை எனது வீட்டில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது வீட்டின் பின் பக்க கதவை எப்போதுமே நாங்கள் திறந்து வைப்பது இல்லை என்றால் சரிதான்.

2. சம்பவத்திற்கு பிறகு ஆஜர் 1 வது எதிரியை நான் எங்கு வைத்து பார்த்தேன் என்றால் மருத்துவமனையில்இருந்து நான் வீட்டிற்கு சென்றவுடன் பார்த்தேன். 1 வது எதிரியை மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்தவுடன் நான் பார்த்தற்கு முன்பு எப்போதாவது பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை.

3. சம்பவத்தன்று எனது வீட்டின் கதவு திறந்திருக்கவும் இல்லை, உடைக்கபடவும் இல்லை என்றால் வீட்டிற்குள் வரும்போது காம்பவுண்ட் சுவரை ஏறிகுதித்துவந்தார், போகும் போது கதவை உடைத்து விட்டு சென்றுவிட்டார். ஆஜர் 1 வது எதிரி எனது ஊர் காரரா, எனக்கு நன்கு அறிமுகமானவரா என்றால் இல்லை. 1வது எதிரியின் பெயர் ஊர் விபரங்கள் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. போலிசார் சொன்ன பிறகு தான் 1வது எதிரியின் பெயர் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். போலிசார் என்னை விசாரிக்கும் போது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் கட்டை மற்றும் கம்பியால் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் கம்பியால் தாக்கியதாக சொல்லியுள்ளேன்.

3. என்னை தாக்கும் போது முகத்தை மூடியிருந்தார்களா என்றால் முகம் எனக்கு தெரியவில்லை. முகத்தை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை, கதவை திறந்தவுடன் என்னை அடித்துவிட்டார். எனக்கு உடனே மயக்கம் வந்து விட்டதால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போன்று எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் கொடுத்த புகாருக்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் ஏற்பட்ட காயம் 1வது எதிரியால் ஏற்படுத்தபடவில்லை என்றால் சரியல்ல.

**2,3 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:** இல்லை.

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.08.19 17:13:27 +0000

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக்காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

**உதவி அமர்வு நீதிபதி,**
**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**சிவகங்கை.**